FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348077

1. District : கிருஷ்ணகிரி மாவட்டம் PS: ஊ.தி.க பிரிவு காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 20/AC/2025 முத.அ. எண் Date: நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு திருத்தச் சட்டம் 2018 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 15.12.2025 நாள் முதல் Date to : 19.12.2025 நாள் வரை

Time Period : நேர அளவு Time from : 16.12.2025 நேரம் முதல் சுமார் 11.00 மணி Time to : 29.12.2025 நேரம் வரை சுமார் 10.25 மணி

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.12.2025 Time : நேரம் 10.15 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் நேரடியாக பதிவு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 கி.மீ வடக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. வினோத் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் வினோத்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 4-4-2025 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி No. 43, மொரசப்பட்டி, காளப்பட்டி கிராமம், நாகரசம்பட்டி அஞ்சல், போச்சம்பள்ளி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. மார்த்தா, சமூக நல பாதுகாப்பு அலுவலர், சமூக நலத்துறை அலுவலகம் ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இவரது தனித்தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. Vimala 31-12-2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

31/12/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

31.12.2025 at 13.15 மணி

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

காவல் ஆய்வாளர்
உ. தி. க பிரிவு
கிருஷ்ணகிரி.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 20/AC/2025, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 31.12.2025 ம் தேதி காலை 10.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், நாகரசம்பட்டி அஞ்சல், காவாப்பட்டி கிராமம் கதவு.எண்.43-ல் குடியிருக்கும், வனராஜ் மகள் திருமதி.V.வனஜா என்பவர் அலுவலகத்திற்கு நேரில் வந்து காலை சுமார் 10.15 மணிக்கு கணினியில் தட்டச்சு செய்து கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் ஏ.வனஜா, வயது-44/2025, த/பெ.வனராஜ், No.43, மோரசப்பட்டி, காவாப்பட்டி கிராமம், நாகரசம்பட்டி அஞ்சல், போச்சம்பள்ளி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம். தற்போதைய முகவரி: க.எண்.27, பர்மா நகர், அண்ணா நகர், பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம். பெறுநர் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் கண்காணிப்புப் பிரிவு, கிருஷ்ணகிரி மாவட்டம். அய்யா, நான் மேலே சொன்ன முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் உள்ள வால்மீகி ஹெர்பல் ப்ராடக்ட் என்ற நாட்டு மருந்து கடையில் கடந்த 10 வருடமாக பணிபுரிந்து வந்தேன். எனக்கு கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட்டம் மருதேரி அஞ்சல், காவாபட்டி கிராமத்தில் திரு.சின்னசாமி மகன் மாது என்பவருக்கும் எனக்கும் கடந்த 1999-ஆம் ஆண்டு பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்று 10 ஆண்டுக்கு பின்னர் என் கணவர் மாது அவர்கள் என்னிடம் வரதட்சனை கேட்டு அடிக்கடி சண்டை பிடிப்பார். மேலும் எனது கணவர் மாதுக்கு பிரியா என்ற வேறு பெண்ணிடம் தவறான உறவு இருப்பது எனக்கும் தெரிந்த நிலையில் எனது கணவர் திரு.மாதுக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு எற்ப்பட்டு கடந்த 2009-ஆம் ஆண்டு முதல் பிரிந்து எனது இரண்டு குழந்தைகளுடன் வாழ்ந்து வருகிறேன். பின்னர் எனது கணவர் மாது அவர்கள் என்னிடமிருந்து விவாகரத்து வேண்டி கிருஷ்ணகிரி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். ஆனால் அந்த விவாகரத்து மனுவை நான் எற்கவில்லை என்பதால், மேற்படி விவாகரத்து மனுவை நீதிபதி தள்ளுபடி செய்து விட்டார். பின்னர் எனது

கணவர் மாது அவர்கள் எனக்கு தெரியாமல் பிரியா என்பவரை திருமணம் செய்து கொண்டார். பிறகு எனது கணவர் மாது அவர்களிடமிருந்து ஜீவனாம்சம் வேண்டி பூவிந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன். மேற்படி வழக்கில் நீதிமன்றம் மாதம் ரூ.3000/-ம் ஜீவனாம்சம் வழங்க 2021-ம் ஆண்டு உத்தரவு பிறப்பித்தது. ஆனால் மேற்படி உத்தரவு படி இன்று வரை எந்தவித பணமும் எனக்கு கொடுக்கவில்லை. பின்னர் எனது கணவர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டதை பற்றி விசாரிக்க, மேலும் எனது பெற்றோர் அவர்கள் திருமணத்தின் போது கொடுத்த 20 சவரன் நகை, வீட்டு உபயோக பொருட்கள், இருசக்கர வாகனம் மற்றும் வீடு கட்டும் போது என் அப்பா கொடுத்த பணம் ரூ.5,00,000/- ஆகியவற்றை பல முறை என் கணவர் மாதுவிடம் கேட்டேன். ஆனால் மேற்படி பொருட்கள் எதுவும் எனக்கு கொடுக்கவில்லை. பின்னர் மாது மீது பர்கூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். பிறகு காவல் நிலையத்தில் இருதரப்பையும் அழைத்து விசாரணை செய்து, நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு தெரிவித்து ஊஞ்சு 47/2020 வழங்கப்பட்டது. பின்னர் எனது பெற்றோர் அவர்கள் திருமணத்தின் போது கொடுத்த 20 சவரன் நகை, வீட்டு உபயோக பொருட்கள், இருசக்கர வாகனம் மற்றும் வீடு கட்டும் போது என் அப்பா கொடுத்த பணம் ரூ.5,00,000/- ஆகியவற்றை மாதுவிடமிருந்து பெற்றுதர வேண்டி கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள சமூக நலத்துறையில் உள்ள பாதுகாப்பு அலுவலர் மார்த்தா அவர்களிடம் கடந்த 16.10.2025-ஆம் தேதி புகார் மனு கொடுத்தேன். அப்போது சமூகநல பாதுகாப்பு அலுவலர் மார்த்தா அவர்கள், விசாரணைக்கு அழைக்கும் போது தன்னை வருமாறு தெரிவித்தார். அது போல் 12.12.2025-ஆம் தேதி காலை சுமார் 10.40 மணிக்கு 6379860065 என்ற கைபேசி எண்ணிலிருந்து எனது கை பேசி 9543927722 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு எனது புகார் மனு மீது விசாரணை செய்ய உள்ளதால் என்னை 15.12.2025-தேதி காலை 11.00 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தில் சமூக நல பாதுகாப்பு துறை அலுவலகத்திற்கு வருமாறு சமூக நல பாதுகாப்பு அலுவலர் மார்த்தா தெரிவித்துவிட்டு தொலைபேசியை வைத்துவிட்டார். பின்னர் நானும் அவர் கூறியது போல் 15.12.2025-தேதி காலை 11.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தில் உள்ள சமூக நல பாதுகாப்பு துறை அலுவலகத்திற்கு நேரில் சென்று சமூக நல பாதுகாப்பு அலுவலர் மார்த்தா அவர்களை பார்த்தபோது எனது புகார் மனு மீது

உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமானால் கொஞ்சம் செலவாகும் என்றும் உனது வேலையை விரைவாக முடித்து கொடுக்கிறேன் என்று தெரிவித்து லஞ்சமாக ரூ.4,500 கேட்டார். அப்போது பணம் எதுவும் எடுத்துவரவில்லை என்று அவரிடம் கூறிவிட்டு மறுநாள் வருவதாக சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். பின்னர் மறுநாள் 16.12.2025-ம் தேதி காலை சுமார் 11.20 மணிக்கு அலுவலகம் வருமாறு அவரது தொலைபேசியில் எனக்கு தெரிவித்தார். அப்போது நானும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் இருந்ததால் சிறிது நேரம் கழித்து மதியம் 01.00 மணிக்கு சமூக நல பாதுகாப்பு துறை அலுவலகம் சென்று பாதுகாப்பு அலுவலர் திருமதி.மார்த்தா அவர்களை சந்தித்து பேசிய போது அவர் தான் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.4,500/- கொண்டு வந்தியா என்று என்னிடம் கேட்டார். மேடம் அவ்வளவு பணம் என்னால் ரெடி பண்ணமுடியவில்லை கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று பாதுகாப்பு அலுவலர் மார்த்தா அவரிடம் கேட்டேன். அதற்கு அவரும் ரூ.1500 குறைத்து கடைசியாக ரூ.3000 கொடுத்துவிடு அப்போது தான் விசாரணை அறிக்கை தயார் செய்து போச்சம்பள்ளி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பேன் என திட்டவட்டமாக சொல்லிவிட்டார். பிறகு நானும் பணம் ரெடி பண்ணிவிட்டு வருகிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். பிறகு சமூக நல பாதுகாப்பு அலுவலர் 19.12.2025-ஆம் தேதி மதியம் 01.25 மணிக்கு எனது தொலைபேசிக்கு தொடர்பு கொண்டு தான் கேட்ட பணம் ரூ.3000-யை எடுத்துக்கொண்டு 22.12.2025-ம் தேதி அலுவலகம் வருமாறு தெரிவித்தார். பிறகு 22.12.2025-ஆம் தேதி மதியம் சுமார் 12.45 மணிக்கு எனது தொலைபேசியிலிருந்து சமூக நல பாதுகாப்பு அலுவலர் மார்த்தா அவர்களுக்கு தொடர்பு கொண்டு எனக்கு உடல்நிலைசரியில்லை அன்று வரஇயலவில்லை அடுத்த வாரம் வருவதாக தெரிவித்துவிட்டேன். பிறகு சமூக நல பாதுகாப்பு அலுவலர் 29.12.2025-ஆம் தேதி காலை சுமார் 10.25 மணிக்கு எனது தொலைபேசிக்கு தொடர்பு கொண்டு தான் கேட்ட பணம் ரூ.3000-யை எடுத்துக்கொண்டு உடனடியாக அலுவலகம் வருமாறு கூறினார். சமூக நல பாதுகாப்பு அலுவலர் மார்த்தா அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.3,000/-த்தை கொடுத்து எனது வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.3,000/-த்துடன் அவரை சந்திக்க தயாராக இருக்கிறேன். எனவே, என்னிடம் லஞ்சம் கேட்ட கிருஷ்ணகிரி சமூக நல பாதுகாப்பு அலுவலர்

மார்த்தா அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.
இப்படிக்கு (ஒப்பம்) V.Vanaja, 31.12.2025

Sir, a computer typed complaint has been received by me on 31.12.2025 at 10.15 hrs. Further a confidential verification on the general reputation of the accused Tmt.Martha has been made and learnt to be not good. The motive and antecedents of the complainant have been checked carefully and found nothing adverse. Therefore, a case in Krishnagiri V&AC Cr.No.20/AC/2025 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 was registered today on 31.12.2025 at 11.00 hrs against the accused Tmt.Martha, Social Welfare Protection Officer, Krishnagiri. The original FIR along with this complaint was sent to the Hon'ble Court of Principal District/Session Judge, Krishnagiri and remaining copies were sent to the officers concerned.

31/12/2025
Insp of police
V&AC Krishnagiri unit.